பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 03 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மேற்காசிய நாடுகளில் விரைவில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்பிடம் வலியுறுத்தியுள்ளார்.

**2.** நாட்டின் பாதுகாப்பு நிலைமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

**3.** பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு கையிருப்பு போதிய அளவில் உள்ளதாக பெட்ரோலிய அமைச்சகம் மீண்டும் தெரிவித்துள்ளது.

**4.** மூன்றாம் பாலினத்தோர் உரிமைகள் தொடர்பான சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது.

**5.** தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன்சிப் போட்டியின் குண்டு எறிதலில் தமிழகத்தின் அக்ஷயா, பாலாஜி வெண்கலப்பதக்கம் வென்றுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியை தொடர்புகொண்டு மேற்காசிய நிலைமை குறித்து விவாதித்தார்.

இதுதொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அமெரிக்க அதிபர் உடனான தொலைபேசி உரையாடலின் போது பயனுள்ள தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

மேற்காசிய நாடுகள் மற்றும் ஈரானில் உடனடியாக சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், விரைவில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் இந்தியா விரும்புவதாக தாம் அமெரிக்கஅதிபரிடம் கூறியதாக தெரிவித்துள்ளார்.

**Hormuz** நீரிணைப்பகுதி மூடப்படக்கூடாது என்றும், ஒட்டுமொத்த உலகிற்கும் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பாதுகாப்பாக எடுத்துச் செல்லவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தாம் வலியுறுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைதி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை மேற்காசியப்பகுதிகளில் நிலைநாட்டுவதற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மேற்காசிய நாடுகள் பிரச்சினைக்கு சமரச பேச்சுக்கள் மற்றும் தூதரக நடவடிக்கைகள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களவையில் இன்று உரையாற்றிய பிரதமர், மேற்காசியாவில் மோதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், **Hormuz** நீரிணையை போக்குவரத்துக்கு திறந்துவிட வேண்டும் என்றும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக கூறினார்.

மேற்காசிய மோதல்கள் தொடங்கிய போதிலிருந்தே மேற்காசிய மற்றும் வளைகுடா நாடுகளின் தலைவர்கள் ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடனும் தொலைபேசி வழியாக தாம் தொடர்ந்து பேசி வருவதாக தெரிவித்தார்.

**Hormuz** நீரிணை வழியாக செல்லும் வர்த்தக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது சர்வதேச கடல் போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தாம் தெரிவித்ததாக கூறினார்.

சர்வதேச கடல் போக்குவரத்துக்கு தடை செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய போர் சூழலில் அங்குள்ள இந்திய கப்பல்களை பாதுகாப்பாகவும், எவ்வித சேதமின்றியும் கொண்டுவருவதற்கு

அனைத்து தூதரக முயற்சிகளையும் இந்தியா எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பெட்ரோல், டீசல், எரிவாயு மற்றும் உரங்கள் இந்த நீரிணை வழியாக கொண்டுவரப்படுவதாகவும் அவர் கூறினார்.

கடந்த சில நாட்களில் கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு போன்றவை பாதுகாப்பாக கொண்டுவரப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வளைகுடா நாடுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்திய மக்கள் வசித்து வருவதாக தெரிவித்த பிரதமர், அவர்களின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**Hormuz** பகுதியில் அதிக அளவில் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்திய மாலுமிகள் அதிகம் பேர் அங்கு சிக்கியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஈரானிலிருந்து ஆயிரம் இந்தியர்களும், மற்ற வளைகுடா நாடுகளிலிருந்து **3** லட்சத்து **75** ஆயிரம் பேரும் பாதுகாப்பாக தாயகம் திரும்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் ஒவ்வொரு துறையிலும் சுயசார்பு நிலையை எட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருவதாக தெரிவித்த பிரதமர், பிற நாடுகளை சார்ந்திருக்கும் நிலையை மாற்றுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்தியாவின் 90 சதவீத வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு கப்பல்கள் மூலமே மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த பிரதமர், இந்நிலையை மாற்றுவதற்கு உள்நாட்டிலேயே கப்பல் கட்டும் தொழிலை ஊக்குவிப்பதற்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

பாதுகாப்புத் துறையை மேலும் வலுப்படுத்தும் வகையில், பாதுகாப்புத் துறைக்கு தேவையான தளவாடங்கள் மற்றும் வாகனங்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மேற்காசிய போர் சூழல் காரணமாக இந்தியா எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று தமது துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் பேசிய அமைச்சர், உலக அளவிலும், மண்டல அளவிலும் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைமை குறித்து உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலகளாவிய அரசியல் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும், புதிய வாய்ப்புகள் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு, ஏற்றுமதி இறக்குமதி நிர்வாகம் குறித்தும், பாதுகாப்பு தளவாட உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

தற்போதுள்ள ராணுவ தளவாடங்களை ஆய்வு செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ராணுவ நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான போர் அணுகுமுறைகள் குறித்தும் கண்காணித்து அதற்கேற்ற வகையில் நாட்டின் பாதுகாப்பு நிலைமையை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த பத்தாண்டுகளுக்கான பாதுகாப்பு செயல் திட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ராணுவ தளவாடங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும், ராணுவ தயார் நிலை குறித்தும் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

மூன்றாம் பாலினத்தவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை தாக்கல் செய்து பேசிய சமூக நீதி அதிகாரமயமாக்கல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார், உடல் அமைப்பு காரணமாக சமூக ரீதியாக பாதிக்கப்படுவோருக்கு சட்டப்பூர்வமான உரிமையை வழங்கும் நோக்கில் இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அவர்களுக்கான உரிமையை உறுதி செய்வதுடன், அவர்களின் நலனை முன்நிறுத்தியும், அதிகாரத்தை உறுதி செய்யவும் இது கொண்டுவரப்படுவதாக தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் மூன்றாம் பாலினத்தவருக்கான அடையாள சான்றிதழை வழங்குவதற்கு இம்மசோதா வகை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மசோதா மீதான விவாதத்தில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் எஸ். ஜோதிமணி, மூன்றாம் பாலினத்தோரின் கருத்துகளை கேட்காமல் இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக கூறினார்.

அவர்களின் உரிமைகளை பாதிக்கும் வகையில் இந்த மசோதா உள்ளதாகவம் அவர் குறிப்பிட்டார்.

சமாஜ்வாதி கட்சியின் ஆனந்த் பதூரியா, இம்மசோதாவை எதிர்ப்பதாகவும், தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு இதனை அனுப்ப வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

திமுக உறுப்பினர் டாக்டர் சுமதி, மூன்றாம் பாலினத்தவரின் அடையாளத்தை உறுதி செய்வதில் மாநில அரசுகளுக்கு சிக்கல் இருப்பதாக தெரிவித்தார்.

மருத்துவ சான்றிதழ் இல்லாமல் மூன்றாம் பாலினத்தோர் தாங்களாகவே தங்கள் அடையாளத்தை தெரிவிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

தெலுகு சேதம் கட்சியின் டாக்டர் பைரெட்டி சபரி, இம்மசோதாவை வரவேற்பதாகவும், மூன்றாம் பாலினத்தவருக்கான அடையாளத்தை உறுதி செய்து நீதி நிலைநாட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அஸ்ஸாம், கேரளம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

இந்த மூன்று சட்டப்பேரவைகளிலும் அடுத்த மாதம் 9-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

பெட்ரோல், டீசல் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலிய அமைச்சகத்தின் இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா, சமையல் எரிவாயு உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொதுமக்கள் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு கையிருப்பு குறித்து பரப்பப்படும் வதந்திகளை நம்பக்கூடாது என்றும்,

தேவையில்லாமல் எரிபொருட்களை வாங்கி சேமித்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் கூறினார்.

உறைவிடப் பள்ளிகள், கல்லூரிகள், அங்கன்வாடி மையங்கள் போன்றவற்றிற்கு தேவையான சமையல் எரிவாயுவை விநியோகம் செய்ய எண்ணெய் நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவற்றிற்கு எரிவாயு குழாய் மூலம், சமையல் எரிவாயு வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட துறைமுகங்கள் அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் திரு ராஜேஷ்குமார் சின்ஹா, சமையல் எரிவாயுவை ஏற்றிக்கொண்டு வந்த இரண்டு இந்திய கப்பல்கள் பாதுகாப்பாக **Hormuz** நீரிணையை கடந்து வந்துள்ளதாக தெரிவித்தார்.

விரைவில் அவை இந்தியா வந்து சேரும் என்றும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>

தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன் போட்டி புவனேஷ்வரில் இன்று தொடங்கியது.

**இன்று நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் குண்டு எறிதலில் தமிழகத்தின் அக்க்ஷயா வெண்கலப்பதக்கம் வென்றார்.**

**குண்டு எறிதல் ஆடவர் பிரிவில் பாலாஜி வெண்கலப்பதக்கம் வென்றார்.**

**<<<<<<<END>>>>>>**